**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

D.W.–8

O.S.No.250/2017

2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. சுப்பிரமணியன் | வயது:74 |
| த/பெ. : திரு. சேது | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதி ஆஜர் இல்லை. 2 ம் பிரதிவாதி ஆஜர். வாதி, 1,2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சம்மன் வந்தன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். 2007–2008 கால கட்டத்தில் 3 ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு நான் ஆடிட்டராக இல்லை. 2008–20012 வருடக்காலத்தில் அந்த நிறுவனத்திற்கு ஆடிட்டராக இருந்தேன். அவ்வாறு ஆடிட்டராக இருந்து 3 வது பிரதிவாதி நிறுவனத்திற்காக ஆவணங்களின் அடிப்படையில் நான் தாக்கல் செய்த வருமான வரி கணக்கு விவரங்கள் என்னிடம் இல்லை. 26.4.2014 – ம் தேதி 1 ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்துவிட்டேன். **வா.சா.ஆ–** 8 என்னால் வழங்கப்பட்ட ஆவணம் என்றால் சரி. அதில் சொல்லப்பட்டவாறு வருமான வரி கணக்குகள் தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. அதன் விவரங்கள் 1 ம் பிரதிவாதியிடம் கொடுத்துவிட்டேன். **வா.சா.ஆ–** 7 ல் சொல்லப்பட்டுளள enclosure ஆவணங்களில் வருமான வரி விவரங்கள் அனைத்தும் உள்ளடங்கி உள்ளது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்னால் 3 வது பிரதிவாதி நிறுவனத்திற்காக 2012–2013 த்தில் assessment வருடத்தில் தாக்கல் செய்யப்பட்ட வருமான வரி கணக்கு விவரங்கள். அது **பி.வா.சா.ஆ– 12.** இந்த ஆவணத்தில் அசல் வருமான வரி அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதற்கு அடுத்த வருடம் கோவிந்தராஜும் இரு நபர்கள் வந்தார்கள். அவர்கள் கேட்டு கொண்டதன் பேரில் நகல் எடுத்து கொடுத்த ஆவணம் தான் அது. **பி.வா.சா.ஆ–12** ல் குறிப்பிட்டுள்ளவாறு 3 ம் பிரதிவாதி நிறுவனத்தின் வங்கி கணக்கில் மீதம் உள்ள தொகை திருப்பூர் IOB வங்கியில் இருந்தது. வருமான வரி கணக்கு assessment

விவரங்கள் தாக்கல் செய்வதற்கு கடைசி தருவாய் இருந்ததால் கணக்கு விவரங்களை பாக்க முடியவில்லை. அதனால் இருந்த ஆவணங்கள் கொண்டு assessment ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டது. அந்த சமயத்தில் யார் அதை தாக்கல் செய்ய அறிவுறுத்தினார்கள் என்று ஞாபகம் இல்லை.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய கட்சிகாரர் என்ன ஆவணங்களை கொடுத்து எனக்க அறிவுரைகள் வழங்குகிறறோ அதன் அடிப்படையில் தான் வருமான வரி விவரங்களை தயார் செய்து அவர்களிடம் சரி பார்த்த பிறகு கையொப்பம் பெற்று வருமான வரி அலுவலகத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரி. 3ம் பிரதிவாதி நிறுவனத்திற்காக பங்குதாரர் யார் ஆவது ஒரு வர் கையொப்பம் செய்த பிறகு தான் வருமான வரி தாக்கல் செய்வேன். **பி.வா.சா.ஆ– 12** ல் 3ம் பிரதிவாதி நிறுவனத்திற்காக யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2024.12.13 10:37:02 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.